பல்வேறு நூல்களை சரஸ்வதி மகால் நூலகத்தினர் வெளியிட்டு வருகிறார்கள். மேலும் தொடர்ந்து அந்தத் துறையிலே ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது.

Periods for language teaching

* 283 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to increase the number of periods for language teaching in the High Schools in the State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

ஆரம்பச் சுகாதார நிலையங்கள்

* 284 **வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் 1970 முதல் 1974-ம் ஆண்டு வரை எத்தனை ஆரம்பச் சுகாதார நிலையங்கள் துவங்கப்பட்டன ?

(இ) இவற்றிற்காக மொத்தம் எவ்வளவு தொகை செலவழிக்கப்பட்டது ?

(உ) இதில் மத்திய அரசு உதவி ஏதாவது உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) 1970-ம் ஆண்டு முதல் 1974-ம் ஆண்டு வரை 37 ஆரம்ப சுகாதார நிலையங்கள் புதியதாகத் துவங்கப்பட்டன.

(இ) 1970-ம் ஆண்டு எப்ரல் 1-ம் தேதி முதல் 1974-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் முடிய இந்த 37 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு ரூ. 55,52,506.44 பைசா செலவழிக்கப்பட்டது.

(உ) இல்லை.